# கண்ணகி வழக்குரை

பதிப்பாசிரியர்

மட்டுநகர் வித்துவான் F. X. C. நடராசா

அரசு பதிப்பகம்

1965 35 சதம்

# அரசு புத்தகக் குடும்பம்

ஈழத் தமிழிலக்கியத் துறையிலே தரமான நூல்களை வெளியிடுதலையே நமது இலட்சியமாகக் கொண்டுள்ளோம். நமது வாசகரின் சௌகரியங்களை மனதிற் கொண்டு புதிய திட்ட மொன்றை உருவாக்கியுள்ளோம். ஈழத்தின் இலக்கிய வரலாற்றிலேயே முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை அறிமுகஞ் செய்வதிற் பெருமையடைகின்றோம். அரசு வெளியீடாக இதுவரையிற் கீழ்க்காணும் ஒன்பது நூல்கள் முறையே வெளியாகியுள்ளன.

1. தோணி - வ. அ. இராசரத்தினம்
2. வாழையடி வாழை - க. செபரெத்தினம்
3. பகவத்கீதை வெண்பா - புலவர்மணி
4. இளமைப் பருவத்திலே! - எம். ஏ. ரஹ்மான்
5. மரபு - எம். ஏ. ரஹ்மான்
6. ஈழத்து இலக்கிய வளர்ச்சி - இரசிகமணி
7. அண்ணல் கவிதைகள் - அண்ணல்
8. பரியாரி பரமர் - சாணு
9. இலக்கிய உலகம் - வி. கந்தவனம்

## அரசு வெளியீடு

231, ஆதிருப்பள்ளித்தெரு

கொழும்பு-13

இவற்றின் மொத்த விலை ரூ. 19.55 ஆகும். பதினைந்து ரூபாய் அனுப்பி அரசு புத்தகக் குடும்ப அங்கத்தவர்களாகச் சேர்பவர்களுக்குத் தபாற் செலவின்றி இந்த ஒன்பது புத்தகங்களும் அனுப்பி வைக்கப்படும். அத்துடன், இனி வெளிவரும் அரசு வெளியீடு நூல்கள் 20% கழிவுடன் தபாற்செலவின்றி அனுப்பிவைக்கப்படும். 'இளம்பிறை' மறுபிரசுர நூல்களும், அரசு வெளியீடுத் தகவல்களும் இனாமாக அனுப்பி வைக்கப்படும். இந்த அரிய சந்தர்ப்பத்தை ஈழத்தமிழ் வாசகர்கள் பயன்படுத்திக் கொள்வார்களாக!

# கண்ணகி வழக்குரை

இஃது

ஆரியச் சக்கரவர்த்தி

சிங்கைச் செகராச சேகரன் ஆகிய

வீரன்

நூலகத்திற்கு அன்...
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
மேனாள் துணைவேந்தர்
16, பாரதி தெரு,
திருமலை நகர் இணைப்பு,
பெருங்குடி, சென்னை—600 096.

மட்டுநகர்

வித்துவான் F. X. C. நடராசா

அவர்களால்

அரசு பதிப்பக அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1965

# முன்னுரை

கண்ணகி வழக்குரை என்று வழங்கப் பெறும் இக்காவிய மானது யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளிலுள்ள கண்ணகி கோயில்கள்தோறும் ஆண்டுக்கு ஆண்டு வைகாசித் திங்களில் நடைபெறும் விழா நாட்களில் படித்துவரும் ஏட்டுவடிவ நூலாகும்.

இதுகாறும் இந்நூல் அச்சேறி வெளிவந்திலது. ஏட்டுச் சுவடியாகவே எல்லாக் கோயில்களிலுமிருந்து வருகிறது. இவ் வேட்டுச் சுவடிகள் ஊருக்கு ஊர், மாற்றங்களுடனும் எழுத்து வழுக்களுடனும் எழுதப்பட்டு, பிரதிபேதங்கள் உடையனவாக இருக்கின்றன.

இந்நிலையிலிருக்கும் இந்த நூலை அச்சேற்றி உருவாக்கும் முயற்சியின் சென்ற பல ஆண்டுகளாக ஈடுபட்டுழைக்கவே பெரியார் பலரிடம் ஏட்டுப் பிரதிகள் பெறுதற்கு வாய்ப்புகள் கிடைத்தன. இவ்வகையில் அங்கணுமக்கடவை கண்ணகையம்மன் பூசகரும், மட்டக்களப்பு —ிசெட்டிபாளையம் கணபதிப்பிள்ளைப் புலவரும், தாழங்குடா வ. வி. அ. செம்பாப்போடி அவர்களும், சிங்களவாடி தம்பிப்பிள்ளை அவர்களும், கல்லடித்தெரு நாகையா அவர்களும் எமக்குப் பிரதிகள் தந்துதவியதுமன்றிப் படியெடுத்துந் தந்தனர். இவர்களுடன் சேர்ந்து ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கியும் பயிற்சி மிக்கார் வாய்க்கேட்டுத் திருத்தியும் முதலில் முதலிரு காதையினையும் வெளியிட முன்வரலாயினேன்.

ஈழத்தில் கண்ணகி வழிபாட்டின் சரித்திரம்பற்றிப் பலரும் பலவாறாக எழுதியுள்ளாரெனினும் முற்ற முடிந்த வரலாற்று நூலாக இதுவரை வெளிவரவில்லையென்பது உண்மையே. இதுபற்றிய ஆராய்ச்சியை இங்கு விரித்துரைக்க முயன்றிலன். ஆனால், இந்நூல் ஆசிரியர்பற்றி ஒருவாறு கூற ஆசிக்கின்றேன்.

இந்நூலை ஆக்கியோன் பெயர் நூலின் இடைநடுவே அரங்கேற்று காதையில் வரும் செய்யுள் ஒன்றினாற் தெரியவருகின்றது. அது வருமாறு:

அவனியயில் குடிநயினாப் பணிக்கனெனும் பவமிகுந்த
கவளமதக் களிற்றண்ணல் காங்கேசன் தேவையர்கோன்
தவனென விளங்குபுகழ் சயவீரன் தாரணியில்
சிவனருளா லிக்கதைக்குச் செந்தமிழ்ப் பாமாலை செய்தான்.

2\. நாளவமே போகாமல் நல்லறங்க ளவைமுயன்று
பாளை நறும் பூங்குழலார் கற்புநெறி யதுகாத்து
ஆளுகின்ற படிபுரக்கும் ஆராய்ச்சி மணிதூக்கிக்
காளமுகில் போலுதவும் கரிகாலன் திருநாட்டில்.

3\. நாட்டுகின்ற பூம்புகாரில் நற்குடியி லுள்ளவரில்
ஈட்டுநிதி யால்மிகுத்த இயல்வணிகர் * மாசாத்தார்
கோட்டுசிலை வாணுதலாள் கொடியிடையாள் மனைவியுடன்
வாட்டமற வுடன்வாழ்ந்தே மகிழ்ந்திருக்குங் காலையிலே.

4\. காலையிலே காரிகையார் கதிரவனைக் கைதொழுது
வேலையிலே எழுமதிபோல் மெல்லியலார் முகமிலங்கக்
கோலவன்னக் குயிலினமும் கூறரிய மயிலினமும்
சாலவுந்தங் குஞ்சுபசி தணிப்பதுகண் டப்பொழுது.

5\. அப்பொழுதே ஆயிழைகண் டருள்வணிகர்க் குற்றிசைப்பாள்
செப்பரிய பாலகனைச் சிறப்புடனே பெறுவோமால்
எப்பிறப்புந் தீதணுகா திளமதலை யீன்றதற்பின்
தப்பறவே நங்குடிக்குத் தாழ்வுசற்றும் வாராதே.

6\. வாராதென் றவளுரைக்க வாழ்வணிக னேது சொல்வான்
பாரோர்க ளதிசயிக்கப் பாலகனைப் பெறுவதற்கு
ஆராது கோயிலிலே அருந்தவங்கள் செய்வமென்று
சீராரும் திறல்வணிகன் தேவியுட னுற்றெழுந்தான்.

7\. உற்றுநறு மலர்தூவி உதித்தகதி ரவன்றனையும்
அற்சனைகள் பண்ணிமிக அடிபணிந்து துதித்தேற்றிச்
சொற்புகழை மிகப்படைத்த தொல்வணிகர் மாசாத்தார்
கற்புடைய மனைவியுடன் கருதியேதன் மனையில்வந்தார்.

8\. வந்திருந்தங் கடிசிலுண்டு மனைவியுடன் மாசாத்தார்
சிந்தைகளி கூரவொரு சிறுவனைநாம் பெறுவதற்கு
அந்தமிலா ஆதிநாதன் அடியிணைகள் தான்வருடி
இந்துநுதல் வஞ்சியரே இருநிதிய மெடுப்பமென்றார்.

9\. எடுத்தபசும் பொன்னாலே இலங்கிடுபொற் பட்டமது
அடிக்கநல்ல தட்டாரை அங்கழைத்துத் தானிருத்திப்
படிப்படியே யெந்நாளும் பரும்பட்டம் தான்சமைத்துத்
துடியிடைசேர் மனைவியுடன் தொல்வணிகர் நடந்தனரே.

10\. நடந்தனரே வீதிதொறும் நல்வணிகர் மாசாத்தார்
வடந்திகழும் மாமுலையாள் மனைவியுடன் தான்நடந்து
கடந்துபல வாசிலெல்லாங் காளகண்டர் கோயில்புக்குப்
படர்ந்தபுகழ் வணிகேசர் பட்டமது சாத்துவித்தார்.

---

* மாசாத்தார்–சாத்துவ வணிகரின் தலைவர்; பார்வழி வணிகர் தலைவன்.

11. வித்தகனை யடிபணிந்து விரும்பிமகா பூசைசெய்து
ஒத்தமனத் திருவருந்தான் ஒண்ணுதலுங் காதலனும்
சித்தமகிழ்ந் தொருசிறுவன் சிறப்புடனே பெறவேமேல்
உத்தமனே கற்றூண்கள் உவந்துபொன்னால் அலங்கரிப்பேன்.

12. அலங்கரிப்பேன் கோயிலெல்லாம் ஆணிப்பொன் னதனாலே
குலந்தழைத்து விளங்கவரு குதலையைத்தந் தருளீரே
இலங்கியபொற் குடங்களெல்லாம் இரத்தினத்தா
லலங்கரிப்பேன்
நிலஞ்சிறக்கச் சந்தனத்தால் நிறத்ததிரு மெழுக்கிடுவேன்.

13. நிறத்ததிரு மேனியெல்லாம் நீறணிந்த பெருமானே
அறத்திநெறி தவறாத ஆரணத்தி னரும்பொருளே
மறத்தொழிலார் புரமெரித்த வாளரவப் பூணுனே
சிறக்கவொரு பாலகனைத் திருவுளமுற் றருள்வாயே.

14. அருளாற் கருளாகி அம்பலத்தி னடமாடி
மருவாருந் திருச்சடையில் வளர்பிறையை யணிந்தோனே
எருதேறும் பெருமானே எங்களுடை நாயகனே
திருவருளாற் சிறக்கவொரு சிறுவனைத்தந் தாண்டருள்வாய்

15. ஆண்டமகா மேருதன்னை அடற்சிலையாய்த் தான்வளைத்துப்
பூண்டரவம் நாணாகப் புரமூன்று மெரித்தோனே
பாண்டவர்க்குத் தூதுசென்ற பச்சைமால்தன் மைத்துனனே
தாண்டவப்பொற் றிருப்பாதச்சங்கரனே போற்றியென்றாள்.

6. சங்கரனே போற்றியென்று தாள்பணிந்து துதித்தேற்றி
அங்கொருநாட் பூசைபண்ணி யகன்றுபோ யப்பொழுது
மங்கைநல்லாள் பாயலிலே மனதிலது கருத்தாகிச்
செங்கயற்கண் துயின்றளவில் தேவர்பிரா னெழுந்தருளி.

7. தேவர்பிரா னெழுந்தருளிச் சேயிழையாள் முன்பாக
மேவுமக வாசைவிட்டு வேறுமுண்டோ வெனநினைந்து
ஆவலுடன் காரிகையாள் அன்புகண்டங் ககமகிழ்ந்து
பூவுலகையாளுதற்கோர் பொன்னெழுத் தாணிகொடுத்தார்.

8. கொடுத்தவெழுத் தாணிதன்னைக் கும்பிட்டுத் தான்வாங்கி
அடித்தெழுப்பி னாற்போலே ஆயிழையு மெழுந்திருந்து
மிடித்தவர்க்குக் கிடைத்தநிதி விரைந்தெடுத்துக்
கொள்வதுபோல்
கடுத்துணர்ந்த வாணுதலுங் கணவனுக்கங் குற்றுரைப்பாள்

19. உரகனையும் பணிபூண்டு உடுத்தபுலித் தோலுடனே
கரமதனில் மான்மழுவும் கடுவிடைமே லெழுந்தருளிப்
புரிகுழலே யிந்தாபொன் னெழுத்தாணி என்றுதர
இருகரமுங் கோடாமல் யான்வேண்டிக் கொண்டேனே.

20. வேண்டியபுத் திரனையின்று மெல்லியலே பெற்ளுேங்காண்
ஆண்டவற்கு நாமிசைந்த அத்தனையுங் கொடுப்ப தென்று
ஈண்டியதோர் நிதிகளெல்லாம் எடுத்தடைவே தாமெடுத்து
மீண்டும்பிற வாதவற்கு மிகுபூசை செய்தனரே.

21. பூசைமிகத் தானடத்திப் பூசுரர்க்குத் தானமிட்டுத்
தேசிகனுர் மாசாத்தார் தேவியுட னகம்புகுந்து
நேசமிகக் களிகூர்ந்து நேரிழையுங் காதலனும்
வாசமிகு மலரணைமேல் மகிழ்ந்திருக்குங் காலையிலே.

22. காலையிலே காரிகைதான் கதிரவனைக் கைதொழுது
வேலையிலே யெழுமதிநேர் மெல்லினல்லாள் முகமலர்ந்து
நீலவிழி யுங்கருகி நிறமும்வே ருய்விடவே
பாலனைய மொழியார்க்குப் பதைத்துறவே பிறவடிகள்.

23. அடிக்கமலந் தான்வருந்த அன்னையருந் தாதியரும்
வெடித்தமலர்க் குழல்மடவார் மெய்வருத்தங் கண்டுமிக
படிப்படியே யெந்நாளும் பரிகாரத் துணவளிக்க
வடித்த சுடர்க் கண்ணுர்க்கு மாதமூன்று சென்றனவே.

24. சென்றனவே நாலுதிங்கள் சிறந்தனவே ஐந்து திங்கள்
அன்றியுமோ ராறுதிங்கள் அவைமுடிந்து ஏழுதிங்கள்
மன்றமருஞ் சீரகத்தார் வாழ்வணிகர் மாசாத்தார்
ஒன்றுபட நிரம்பிடவே உற்றகண்ணு ளனேது செய்தார்.

25. கண்ணுளன் களிகூரக் காரிகையார் புடைசூழ
எண்ணுன திங்களது ஏந்திழைக்கும் நடந்திடவே
மண்ணேர்கள் தாம்மதிக்க மாதமொன்ப தானபின்பு
பண்ணுன மொழியார்க்குப் பத்தும்வந்து நிரம்பியதே.

26. பத்தும்வந்து நிரம்பிடவே பாவையர்க்குப் பரிகாரம்
எத்தனையும் தான்மிகவே ஏந்திழைக்கு நோவுகண்டு
மெத்தமனங் களிகூர்ந்து விரும்பிவந்து மருத்துவிச்சி
முத்துநிறை நாழிவைத்து மொய்குழலைத் தேற்றினளே.

27. தேறியசொல் லாற்றெளிந்து சேயிழையு மப்பொழுது
கூறரிய பாலகனைக் குறிப்பாகப் பெற்றதற்பின்
பேறுபெறச் செய்ததவம் பெற்ளுேம் நாமென்று சொல்லி
ஏறுமறை வேதியரை யிங்கழைக்க ஆள்விடுத்தார்.

28. விட்டதூதர் விரைந்தோடி வேதியரை யழைத்துவந்தார்
இட்டமுட னுளாய்ந்து இயல்வணிகர்க் குற்றுரைப்பார்
மட்டவிழுந் தாரானே மகன்பிறந்த முகூர்த்தமிது
அட்டமூஞ்சென் மமுமாகும் அடர்ந்தவியா ழன்சனியே.

29. அடர்ந்த திசைக் கேதுபத்து அல்லாத குறைகளில்லை
மடந்தையர்க்குப் பொருள்தோற்று மறுதேசம்
போகைதிண்ணம்
கடந்தகலை ஞானமெல்லாம் கற்பதுவுந் தப்பிலைகாண்
திடம்பரவும் வணிகேசர் சிங்கராசி சென்மமென்ருர்.

30. என்றுமறை வேதியர்க்கு இசைந்ததானம் பலகொடுத்து
மின்னிடையைப் பாகம்வைத்த வித்தகற்கு நிதிவழங்கி
அன்னமென்னும் நடையார்க்கு ஆனபரி காரமிட்டு
மன்னவர்கள் கொண்டாட மஞ்சனவா டல்புரிந்தார்.

31. புரிந்தகலை குழல்சரியப் பூவையர்நீ ரோசை கொள்ளத்
திருந்தியவஞ் சாமருங்கை சேயிழைக்கு நடந்திடவே
நிரம்பவே பன்னிரண்டில் நேரிழைநீ ராடியபின்
வருந்திவந்து மாசாத்தார் மைந்தனையு மெடுத்தணைத்தார்.

32. எடுத்தணைத்து மைந்தனையும் இயல்புறமஞ் சனமாட்டி
அடுத்ததாதி கைக்கொடுத்தே அழகுபெறு மைந்தனுக்கு
வடித்தநல்ல பாலமுதம் வாகாக அருந்தியபின்
குடிக்கரிய பாலகற்குங் கூடியதே யஞ்சுதிங்கள்.

## விருத்தம் சிந்து

33. திங்கள ஞ்சானபின் தண்டைகள் பூட்டி
சிறக்கக் கழுத்துக்குக் கட்டுமணிந்து
எங்குஞ் சிறக்கவே கைக்குக் காப்பிட்டு
இசைந்த அரைஞாணிடைக்கிடை சேர்த்து
அங்கும் வயிரப் பருமணி தண்டைகள்
ஆவதெல்லாந் திருத்தாளுக் கணிந்து
செங்கமலக் கையினாலவன் சென்று
செல்வன்றனை யெடுத்தின்ப முற்றாரே.

34. இன்பமுற்றே மைந்தனைத் தொட்டிலேற்ற
இயல்வான கண்ணாளர் தம்மை யழைத்து
அன்புள்ள மாந்தரே வாருமிப்போ
தழகான தொட்டிலொன்றே சமையுமென்ன
முன்புள்ள சாத்திரத்தின் படியேதான்
முற்றிலும் சந்தன மரத்தினாற் செய்து
ஒன்பது வகை நவரத் தினத்தாலே
உவப்புடன் கைத் தொழில்கள் செய்யுமென்றாரே.

35. என்று வணிகேசர் இவைகூற
இசைந்துமே கண்ணாள ரிதைத்தொடங்கினரே
நன்றலிக் கொம்பும் நவரத்தினத்தாலும்
நலமான கால்கள் கடைந்தெடுத்தே தான்
ஒன்றுபட இருப்பாணிகள் செய்து
உற்றதெல்லாஞ் சேர்த்து ஆணி தைத்தாரே
நன்றுபடக் கம்பை போட்டிடை கண்டம்
நல்லோர் மதிக்க அழுத்தி வைத்தாரே.

36. வையகம் மகிழவே தொட்டில் சமைத்து
வகையான அஞ்சுவர்ணச் சேர்வை சேர்த்து
துய்ய நவரத்தினமெல்லாந் தோற்றச்
சமைத்துத் துலங்கவே யெங்கும்
தையலரும் ஆடவரும் காணவென்று
நாட்டிய நளனச் சபையும் வகுத்து
செயந்கரிதான தொட்டில் கொடுவந்தே
சீர்வணி கேசர்முன் காட்டினரே.

## நடை

37. வணிகேசர் கண்டுமிக மனமகிழ்ந்து தொட்டில்தனை
பணியோடு பட்டாடை பரிசுகளுந்தான் கொடுத்தார்
அணியாரும் மதலைதனை அலங்கரித்து வாருமென்ன
கணிதர் நல்ல முகூர்த்த மிடக்கண்டு தொட்டிலேற்றினரே.

38. ஏறியதோர் தொட்டிலிலே இகல்வணிகர் பாலகனைக்
கூறிய சப்பாணி கொட்டிக் குலவுமுறை வளமெலாம்
வீறுபெறக் கோவலனுர் என்று திருநாம மிட்டு
பேறுபெறப் பாலடிசில் பேணி மைந்தன் தனக்களித்தாரே.

39. பாலடிசில் அமுது செய்தே பரிவுடைய கோவலனுர்
வேலனை விழிமடவார் மெல்ல நடைதான் வகுத்தார்
சால இருபதம் நோகத் தாயார் முன்வந்தொரு
கோல மதலையை யெடுத்து கொண்டாடிக் கொடுவந்தார்.

40. கொண்டாடும் பாலகர்க்கு குறித்த வயதீராண்டு
கண்டோர்கள் தான்மதிக்கக் கலையுடுக்கப் பருவமென்ன
வண்டாடுஞ் சீரகத்தார் வாழ்வணிகர் மாசாத்தார்
உண்டான தஞ்சுவய துவந்த மைந்தன் கோவலற்கு.

41. கோவலற் கஞ்சாம் வயதில் குலமறையோர் தனையழைத்து
ஆவலுடன் வாய்பாடம் அவைபலவும் தான் வகுத்து
தேவரிய தென்கலையும் வடகலையும் தான் பயிற்றிப்
பாவலர்கள் கொண்டாடப் பன்னிரண்டாம்வயது புக்காம்.

42. பன்னிரண்டு வயது புக்கும் பரிவுடைய மைந்தனுக்கு
முன்னிரம்பப் பதினறு முடிந்தது கோவலற்கு
என்னிலமுங் கொண்டாட இயல்வணிகர் மாசாத்தார்
கன்னல் மொழிக் கண்ணகையைக் கல்யாணஞ்
செய்வதென்றார்.

வரம்பெறு காதை முற்றும்.

# அம்மன் பிறந்த காதை

1. பரராச முனிதவத்தாற் பரிந்துபெற்ற கன்னிதன்னைச்
சீராரும் சிவனருளாற் சிவலோகச் சபைதனிலே
ஆராருங் காணரிய அருள்பதத்தைப் பணிந்துமுனி
பேராருந் திருவருளாற் பெற்றகன்னி தனைத்தொழுதான்.

2. கன்னிதனை யருளியபின் காரணமுண் டாகவென்று
பொன்னுலக முதலான புரந்தரனுந் தேவர்களும்
துன்னுதவ முனிவர்களுஞ் சுரருமா லயன்றானும்
பொன்னுலவு பதம்போற்றிப் புகழ்ந்துநிறைந்
திடுஞ்சபையில்.

3. சபைதனிலே யப்பொழுது தான்வேத முனிவர்தம்மைச்
சிவனருளிப் பாடெனவே திகழ்முனிவந் தேபணியத்
தவமதனாற் பரராசனாற் தன்புதல்வி திருக்கதையை
இபமுகனே மகாமேருவில் எழுதிவர வேணுமென்றார்.

4. வாருமென்னப் பரராச மாமுனியைத் தானழைத்துப்
பாரிலருந் தவம்புரிந்து பரிந்துபெற்ற கன்னிதனைப்
பேரான மதுரையிலே பெருத்தமாங் கனியதாகச்
சீராருந் தருவில்வைக்கச் சொல்விடையா தெனவுரைத்தார்.

5. சொற்படியே விரைந்தேகித் துய்யகன்னி தானுக
உற்பனமா யப்பொழுது உற்றகனி யென்றிருப்ப
முற்படவே தவமுயன்ற முனிபுதல்வி தனைமிகவும்
கற்புடைய கன்னியென்றே கண்ணுதலுங் கருணையுற்றார்.

6. கருணையுற்றே அப்பொழுது கற்புநெறி யுங்கொடுத்துத்
தரைமதிக்க அஞ்செழுத்துச் சக்கரமுந் தானருளிப்
பரிவான கற்புடைய பத்தினியென் றேயுரைத்து
அருளாருங் கிருபையுடன் அன்பாக வீற்றிருந்தார்.

7. வீற்றிருக்கும் வேளைதன்னில் மிக்கவுமை யவளுமனந்
தேற்றமுட னெழுந்திருந்து சிவன்பதத்தைத் தான்வணங்கி
மூற்கமுள்ள பாண்டியற்கு முக்கண்ணிலொன்றளிப்பதென்ன
மாற்றமுரை யாதவண்ணம் மாற்றவருள் வேணுமென்றார்.

8. என்றுரைப்ப உமையவளும் ஈசனுமங் கேதுரைப்பான்
குன்றனைய முலைமடவாய் கொடுத்தவரம் மாற்றேம்நாம்
நன்றுமுனி புதல்வியைத்தான் நற்கனியா யுதிக்கவிட்டோம்
மன்றலரு ஆதித்திருவே வல்லபடி பாருமென்றே.

9. ஆதிதிரு வருள்புரிய அம்மையுநன் றெனப்பணிந்து
ஓதியமாங் கனியாக உதித்தகன்னிக் குண்மைபெற
நீதியும்நல் வரம்பலவும் நேர்மையுட னேகொடுத்து
மாதுகற்பு நெறிபலவும் மனத்தக்கினி யுங்கொடுத்தார்.

10. தாளிலணி பொற்சிலம்பு தனக்குநாக மணிஅரியும்
காளமுகிற் குழலாட்குக் கனகபணிப் பூணாரமும்
நீளகனக மணித்துகிலும் நினைத்தவர முங்கொடுத்து
வாளனைய நுதல்விழியை மாற்றவர முங்கொடுத்தார்.

11. தாரைசின்ன மெக்காளம் சங்குகொம்பு நாகசுரம்
பேரிகைதம் பட்டவர்க்கம் பேரான தவில்முரசம்
வீரமுடன் மத்தளமும் மிகமுழங்கி நின்றதிரப்
பாருலகெல் லாய்போற்றப் பைந்தொடியும் வீற்றிருந்தார்.

12. தானிலங்கு தூபதீபம் தண்டரள வாலாத்தி
வானிலங்கு மேற்கட்டி வாய்த்த குங்குமவாடை
கானிலங்கு அலர்மாலை கருணையுடன் தானளித்து
ஆன்பல தேவர்களும் அமையவர மருளினரே.

13. வரமுதவ வுமைதிருவும் மகாதேவன் திருவருளால்
அருள்பெருகும் கயிலைகிரி ஆசனத்தில் வீற்றிருப்பத்
திருமருவும் புயசயிலன் தென்பாண்டி மாநகரில்
வரமினிய மாங்கனிதான் வாசமதாய் வீசியதே.

14. வாசமாங் கனியதனை வந்துகண்டு காவலர்கள்
நேசமுள்ள பாண்டியன்முன் நின்றுவிண் ணப்பமென்னக்
காசினியிற் கண்டதில்லை கதித்தமாங் கனியதொன்று
தேசமெங்கும் புகழ்படைத்த தென்னவனேயெனவுரைத்தார்

15. தென்னவனு மாங்கனியைச் சென்றுகொண்டு வாருமென்ன
அன்னவர்க ளனைவோரும் ஆங்குமரத் தடியில்வந்து
மன்னவர்க்கு நாங்கொடுத்து வரிசைபெற வேணுமென்று
துன்னுகனி தனைப்பறிக்கத் தொழுதுமரத் தேறினரே.

16. ஏறியே பார்த்தளவில் எவ்விழிக்கும் தெரிந்திலது
மாறனுக்கு நாமினிப்போய் மாற்றமென்ன சொல்வமெனத்
தேறிமனம் நின்றவர்கள் தெரிந்துகுறிப் புடனேறி
மீறினோர்க்குந் தெரியாமல் மீண்டிறங்கி வந்தனரே.

17. வந்துநின்றங் கனைவோரும் மன்னனடி தனைப்பணிந்து
அந்தமுடன் மரத்தேறி ஆயவென்னாற் காணாது
ஐந்தருவே பணியநின்றால் அனைவோர்க்குந் தான்தெரியும்
உந்தன்மாங் கனிபறிக்க ஒருவருக்கு முடியாதே.

18. முடியாதென் றேயுரைக்க முடிமன்னன் முகம்நோக்கிப்
படியினின்று காண்பதென்னப் பாற்கரன்போலெழுந்திருந்து
வடிவான வேல்வழுதி வாய்த்தகனி பறிக்கவென்று
கடிகமழும் தொடைமார்பன் கடிதுமரத் தடியில்வந்தான்.

19. வந்துகனி தனைப்பார்த்து மன்னன்மிக அதிசயித்துக்
கந்தமிகு மாங்கனியைக் கடிதாகப் பறியுமென்ன
எந்தவித மாய்ப்பறிப்போம் என்றவர்கள் நிற்பளவில்
அந்தமிகு மொருதவசி அவ்விடத்தில் வந்தனனே.

20. வந்தவரும் பெருந்தவசி மாறனெதிர் முகநோக்கி
இந்தமர வடியில்வந்து நிற்கவந்த காரியமேன்
சிந்தையுற மாங்கனியின் செய்தியர சனுக்குரைத்து
எந்தவிதங் கனிபறிக்க வியலுமோ பாருமென்றான்.

21. பரராசன் தானுரைத்த படியறிந்து பழையோனும்
சீர்பெறப்போக் கணத்திருந்த சிறுசிலையைத் தானெடுத்து
நேர்பெறவே நாணேற்றி நெடுஞ்சரத்தைத் தான்பூட்டி
வாரமுற வேதொடுத்து வரவொருபா லறவிடுத்தான்.

22. விடுத்தகணை மீண்டுவந்து மிக்கதிருக் கரத்திருப்ப
அடுத்தகனி யற்றுவந்தே அந்தரத்தி லாங்குநிற்கப்
படித்தலத்தில் விழாதபடி பட்டாடை விரிப்பாரும்
புடைத்தவெள்ளை பிடிப்பாரும் பொற்கலங்க ளேந்துவாரும்.

23. ஏந்திநிற்கும் அளவுதன்னில் இயல்தவசி ஏதுசொல்வான்
வேந்தனிரு கையேந்தில் விழுமெனவே யுரைத்தகன்றான்
வாய்ந்தமாறன் கைவிளக்கி வந்தேந்தக் கனியனலாய்த்
தோய்ந்துகையில் விழப்போட்டு துப்புநெற்றி
தனைத்துடைத்தான்.

24. நெற்றிதனைத் துடைப்பளவில் நீண்டபெரும் புகழ்மாறன்
உற்றதிரி யம்பரத்தில் ஒருநயனம் மறைந்திடவே
சுற்றிநின்ற அனைவோரும் துன்பமுற்றுத் திகைத்துநிற்ப
வெற்றிபுனை மாமாறன் மிக்கமனம் சலித்தனனே.

25. மனந்தளர்ந்து நின்றதொரு மாறனுமங் கேதுசொல்வான்
சினங்கடிந்து மன்னர்முன்னே திரிநயனத் தோடிருந்தேன்
கனந்தருமாங் கனியதனாற் கண்மறைந்த காரணத்தை
நினைந்துநான் மறையுணர்ந்தோர்நெறியாகப்பாருமென்றான்.

26. நெறியாக அப்பொழுது நின்றதொரு அலகெடுத்து
முறையோது மறையோர்கள் முகூர்த்தநா ளாய்ந்துரைப்பார்
குறையுனக்கு வேறுமின்றால் குற்றம்வே றுற்றதனால்
இறைவனே இக்கனியால் இன்னுமிடர் வருகுதென்றார்.

27. வருகுதுமன்னு விதனுல் வாழ்மதுரை மாநகர்க்கும்
தரைமீதிற் புகழ்படைத்த தமிழ்மாறன் கூடலுக்கும்
விரைசேரு மாலைபுனை மீனவற்கு மிதனுலே
அரியபழி வருகுதுகாண் அறியுமெமன வேயுரைத்தார்.

28. உரைத்தஅந்தக் கனியதனை உமதுதிரு மாளிகையில்
பெருத்தமா தேவிகையிற் பேணியே வைப்பதென்னப்
பருத்தபுதுப் பொற்குடத்தில் பரிவாக வேகொடுபோய்
கருத்துடனே பேணிவையும் காவலனே யெனவுரைத்தார்

29. காவலனு மப்படியே கனகமணி மாளிகையில்
தேவிதிருக் கைக்கொடுத்துச் சேமமுற வைப்பதென்னத்
தாவுபெரும் புகழ்படைத்த தமிழ்மாற னப்பொழுது
யாவரும்வந் தடிதொழவே ஆங்கவனும் வீற்றிருந்தான்.

30. ஆங்குநின்ற அனைவருக்கும் அமைச்சருக்கும்விடைகொடுத்துத்
தேங்குபுகழ் வேல்வழுதி தேவிதிரு முகம்பார்த்து
வாங்கிவைத்த மூன்றும்நாள் வைத்தமாங் கனியதனை
ஈங்குநான் பார்ப்பதற்கு எடுத்துவாரு மெனவுரைத்தான்.

31. உரைத்தளவிற் றேவிசென்றேஉற்றபொன்னின் குடந்திறக்க
விரைக்கமலத் திருவெனவே மிக்கபிள்ளை யுருவாகித்
தரைக்குளதி சயமிதென்னத் தார்வேந்தற் கேதுரைப்பாள்
புரக்குமரசே கனிதான் பிள்ளையா யிருக்குதென்றாள்.

32. என்றமொழி தனைக்கேட்டே இகல்மாறன் பார்ப்பளவில்
நன்றிது காரணத்தை நமக்கறியப் போகாது
சென்றுமறையோ ரமைச்சர் சிறந்தபெரி யோர்கள்தம்மை
இன்றுகா ஞழிகையில் இங்கழைத்து வாருமென்றான்.

33. அழையுமென உரைப்பளவில் அங்கவர்களனைவோரும்
மழைமுகிலை விலங்குதைத்த மன்னனைவந் தடிபணிந்தார்
பழையமறை வேதியரே பாங்கான மாங்கனிதான்
அழகுசெறி பிள்ளையுரு வாயிருக்கு தெனவுரைத்தான்.

34. எனப்புகல மறையோர்கள் இனையநாள் முகூர்த்தமது
தனைப்பார்த்துத் தெளிந்துகற்ற சதுர்மறையோ
ரேதுசொல்வார்
கனத்தமாங் கனியதுவும் கன்னியுரு வாகியதால்
மனத்திடஞ்சேர் வேந்தேயிங்கு வைத்திருக்கலாகாதென்றார்.

35. என்றுமறை யோருரைப்பார் எழில்மேவுங் கூடலுக்குள்
வென்றிதரும் வேந்தருக்கும் மிக்கசொற்கை மாநகர்க்கும்
துன்றுபுகழ்க் கூடல்மன்னு தொல்வினைகள் வருமிதனுல்
இன்றுபேழைக்குள்வைத்தே இலங்குசிந்தில்விடுப்பதென்றார்.

36. என்றுமறை யோருரைப்ப எழில்சேருந் தமிழ்மாறன்
அன்றுமாந் தையர்தமக்கு ஆள்விடவந்தங் கடிபணிந்தார்
இன்றொருபொற் பேழைதண்ணீர் ஏறும லிறக்காமல்
வென்றியுடன் றன்சமைத்து விரைவில்வர வேணுமென்றார்.

37. விரைவில்வர வேணுமென்ன மிக்கமாந் தையர்கள்சென்று
அரைசுரைத்த மொழிப்படியே அக்கசாலை தனிலேகிப்
பரிவுடைய மாந்தையர்கள் பசும்பொன்னாற் றகடிழைத்தே
புரவலன்றன் மனமகிழப் பொற்பேழை சமைத்தனரே.

38. சமைத்துவைத்த பொற்பேழை தனைப்பார்த்துமனமகிழ்ந்து
இமைத்தலத்தி லுள்ளவர்க்கு இதுமுதிய வேலையென்ன
அமைத்தபே ழையைத்துகிலால் ஆங்கவர்கள் மூடியேதான்
இமைத்திறத்தாற் சென்றுவைத்துப் பார்வேந்தைப்
பணிந்துநின்றார்.

39. பார்மீதிற் புகழ்படைத்த பாண்டியன்கண் டுளம்மகிழ்ந்து
சீராருஞ் சதுர்வேதம் தெரிமறையோர் தமைநோக்கிப்
பேரான கனியுதித்த பிள்ளைதனைப் பேழையிலே
நேராக வைத்தனுப்ப நீர்வாரு மெனவுரைத்தான்.

40. வாருமென்ன அனைவோரும் வாய்ந்தமறை வேதியரும்
சீரான அமைச்சர்களும் செந்தமிழ்நூல் வல்லவரும்
ஓராது வாச்சியங்கள் ஒலிகடல்போ லேமுழங்கத்
தார்வேந்தன் சபைதனிலே சகலரும்வந் தீண்டினரே.

41. சதுர்மறையோ ரப்பொழுது தார்வேந்தற் கேதுரைப்பார்
பதிமீது யாத்திரைக்குப் பகர்ந்தநாள் முகூர்த்தமதில்
அதிகவர மாதேவி அம்மைதிருக் கையாலே
புதியபொன்னின்குடத்துடனே பிள்ளைகொடுவாருமென்றார்.

42. கொடுவாரு மெனவுரைப்பக் கோமாறன் றிருமனைவி
படியில் நெறி முறையுள்ள பாண்டிமா தேவியம்மை
பிடியன்ன நடைமாது பிள்ளைதனைத் தானெடுத்துக்
கடிகமழும் தொடைமார்பன் கரமதனிற் கொடுத்தனளே.

43. கரத்தினால் மன்னவனும் கன்னிதன்னை யேவாங்கி
வரத்தினால் மிகப் பெரிய மறையோரும், மன்னவரும்
அருந்தபெறும் அமைச்சர்களும் அதிகவாச் சியமுழங்க
விரித்தோடுங் கடற்கரையில் விரைவினுடன் வந்தனரே.

44. வந்துதிரை தனைவளைந்து மாமறையோ ரப்பொழுது
உந்துகும்ப குடம்நிரைத்து உற்றசாத் திரப்படியே
பொன்றிகழும் பேழைதன்னைப் புட்பவர்ச் சனைகள்செய்து
அந்தமெழும் பொற்றுகிலை ஆங்கதற்குள் விரித்தனரே.

45 ஆங்கரசன் றனைப்பார்த்து அரசேயிம் மதலைதன்னை
சங்கிதற்குள் வையுமென்ன எடுத்தரசன் வைத்தறபின்
பாங்குடனே பால்பழமும் பரிவினுடன் வைத்தருளிப்
பூங்கமலப் பூசுரரும பெட்டகத்தை மூடினரே.

46. பூசுரரு மப்பொழுதே பொங்குகங்கை தனைப்புகழ்ந்து
ஆசிர்வா தங்கள்சொல்லி அரசேயிப் பேழைதன்னை
வீசுதிரைக் கடன் மீதில் விடுத்திடுமி னெனவேதான்
வாசமுடன் வேந்தனுக்கும் மறைவேதியர் தானுரைத்தார்.

47. வேதியர்கள் சொன்னதற்பின் மிக்கமனங் களிகூர்ந்தே
ஆதியரன் றனைவணங்கி அப்பேழை தனையெடுத்து
ஏதுமுனக் கிசைந்திடத்தே ஏகவே யென்றுசொல்லித்
தீதறவே மாமாறன் திரைகடலில் விட்டனனே.

48. விட்டதற்பின் பொற்பேழை விரைந்தாழி தனிலேக
மட்டவிழுந் தார்மார்பன் வழுதிமறை யோர்தமக்கும்
பட்டமுடன் பலவணிகள் பசும்பொன்னின் மாலைகளும்
பட்டுடனே நிதிவகைகள் பலவரிசை யுங்கொடுத்தான.

49. கொடுத்தறபின் னுதுலர்க்கும் குற்றமற்ற வேதியர்க்கும்
அடுத்தபர தேசியர்க்கும் அன்னதான மிகவழங்கி
விடுத்தபல அமைச்சருக்கும் மிக்கவர்க்கும் விடைகொடுத்து
அடுத்தபுகழ் மன்னவனும் ஆசனத்தில் வீற்றிருந்தான்.

## வெண்பா

50. வீற்றிருந் தானரசன் மிக்கமணிப் பேழைதன்னை
நாற்றிசையுந் தான்மதிக்கும் நற்சோழன் — நாட்டிற்
பரிந்தெறியும் காவிரிப்பூம் பட்டினத்தின் மேலே
சரிந்துவரு மாம்பேழை சாய்ந்து.

## நடை

51. சாய்ந்துவர* மாநாகர் தானூமா சாத்தருமாய்
ஏந்துதிரைக் கடற்கரையில் இருபேரும் வருகையிலே
சேர்ந்து வரும் பசும்பேழை திரையூடே வருமதனை
வாய்ந்தபுகழ் மாநாகர் வருகுதுபெட் டகமதென்றார்.

52. பெட்டகம தெனக்கென்றார் பேர்பெரிய மாசாத்தார்
இட்டதற்கு ளிருக்குநிதி எனக்கென்றார் மாநாகர்
திட்டமுடன் மாசாத்தார் செலுமளவி லகனுமது
பட்டமரப் பேழைதன்னை மாநாகர் வரவெடுத்தார்.

---

* மாநாகர் - மாநாய்கன்; மாநாயகன் என்பதன் திரிபு. நீர்வழிவணிகர் தலைவன்.

53. தார்திகழு மாநாகர் தான்பேழை தனைத்திறந்து
சீர்பெறவே பார்ப்பளவில் திருமதலை யுள்ளிருக்கப்
பேர்பெறுமா சாத்தருடன் பெண்பிள்ளை யொன்
றிருக்குதென்ன
நேர்மையுடன் சொற்படியே நீர்கொடுபோய்
வளர்ப்பதென்றார்

54. வளருமென்ற மாசாத்தார் மைத்துனனைத் தான்பார்த்து
உளமகிழ்ந்து சொல்லுகிறேன் ஒலிகடல்முன் னுகநின்று
அளவறவே தவங்கள்செய்து ஆண்பிள்ளை யொன்றுபெற்றேன்
மளவிடையோன் திருவருளால் மணமிதற்கு
முடிப்பதென்றான்.

55 என்றவர்க ளிருபேரும் இசைந்துமொழி கூறியபின்
மன்றலருஞ் சீரகத்தார் வணிகேசர் மனமகிழ்ந்து
கன்றுலவும் சோலைசெறி காவிரிப்பூம் பட்டினத்தில்
சென்றவன்றன் மனைபுகுந்து செந்திருவும் வீற்றிருந்தாள்.

அம்மன் பிறந்த காதை முற்றும்.

மட்டுநகர்

வித்துவான் F. X. C நடராசா

அவர்கள் பதிப்பித்த நூல்களுட் சில:

## மட்டக்களப்பு மான்மியம்

ஸ்ரீ லங்கா சாகித்திய மண்டலப்
பரிசில் பெற்ற நூல்

விலை ரூ. **1-50**

**கிடைக்குமிடம்:**

கலா நிலையம்,

175, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

## ஈழத்து

## நாடோடிப் பாடல்கள்

ஈழநாட்டில்
வழங்கிவரும் நாடோடிப்
பாடல்களின் தொகுப்பு

விலை ரூ. **1-50**

**கிடைக்குமிடம்:**

ஆசீர்வாதம் பதிப்பகம்,

யாழ்ப்பாணம்.

# உங்களுக்குத் தேவையான

- மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்கள்
- மெய்கண்டான் தமிழ் - ஆங்கில சிங்கள டயறிகள்
- பலவர்ணப் படங்கள்
- தமிழ்-சிங்கள-ஆங்கில அச்சு எழுத்துக்கள்
- போட்டோ புளக்குகள்
- பிளாஸ்டிக் பெண்கள் அழகுப் பைகள் (Ladies Hand Bags)
- பிளாஸ்டிக் மனிப் பேஸ்கள்
- பிளாஸ்டிக் திறப்பு பேஸ்கள் (Key Purses)
- பிளாஸ்டிக் புத்தகக் கவர்கள்

★

## இன்னும் பலவிதமான பிளாஸ்டிக் உபகரணங்கள் எம்மிடம் இடைக்கும்

★

விபரங்களுக்கு:—

## "மெய்கண்டான்"

161, செட்டியார் தெரு, கொழும்பு-11
போன்: 79141

★

கிளை:

10, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். போன்: 236

# கொழும்பில்

வசதியாகத் தங்கவேண்டுமா?

அறுசுவை உணவுகள் தேவையா?

யோசனை வேண்டாம்:

நேரே

## இராஜேஸ்வரி பிராமணாள் ஹோட்டலுக்கு

வாருங்கள்

தொலைபேசி எண்: **5939**

* * *

## அறிவுப் பசியா

ஆங்கிலம்-சிங்களம்-தமிழ் ஆகிய
மும்மொழிகளிலும்

* பத்திரிகைகள் சஞ்சிகைகள்
* நூல்கள் ஆகிய சகலவும்

கிடைக்குமிடம்:

## இராஜேஸ்வரி புத்தக நிலையம்

இவர்களே 'இளம்பிறை'யின்
கொழும்பு நகர விற்பனையாளர்

**Rajeswari Brahmin Hotel**

NEWS AGENTS & BOOK SELLERS.
69, Morris Road,
COLOMBO-11.


Printed at the Rainbow Printers, 231. Wolfendhal Street, Colombo 13.